**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 107/2018**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 தங்கவேல் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 20.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**</u>

1) எனது பாட்டா ரெங்கம்மநாயக்கரின் முழுப்பெயர் ரெங்கசாமி என்பதா என்றால் இல்லை. அவரை மண்டையநாயக்கர் என அழைப்பார்கள். ரெங்கம்மநாயக்கரின் மூத்த ஆண் வாரிசு தம்மாநாயக்கர். அவருக்கு அடுத்து பெருமாள்நாயக்கர், கொண்டம்மநாயக்கர், பழனிச்சாமிநாயக்கர். ரெங்கம்மநாயக்கர் தனது பெண் வாரிசுகளுக்கு அவர் காலத்திலேயே திருமணம் செய்து அனைத்து சீர்வரிசைகளையும் செய்துவிட்டாரா என்றால் ஆமாம். மேற்படி பெண் வாரிசுகளுக்கு தாவா சொத்தில் பாகம் உண்டா என்றால் இல்லை. மேற்படி பெண் வாரிசுகள் தனது கணவர் வீட்டில் வசித்து, தற்போது அவர்களும் இறந்து விட்டார்கள். 15 ம் பிரதிவாதி நாகலட்சுமி யாருடைய வாரிசு என்றால், கொண்டமநாயக்கரின் வாரிசு ஆவார். கொண்டமநாயக்கருக்கு 15 ம் பிரதிவாதியை தவிர வேறு வாரிசு கிடையாது. அவரது மனைவியும் இறந்துவிட்டார்.

2) 1 ம் பிரதிவாதி, தம்மாநாயக்கரின் மனைவி என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியின் வாரிசு என்றால் சரிதான். பெருமாள்நாயக்கரின் மனைவி 6 ம் பிரதிவாதி பழனியம்மாள், அவரது வாரிசுகள் 7 முதல் 14 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவா A அயிட்டத்தில் 1 முதல் 17 அயிட்ட சொத்துக்கள் ரெங்கம்மநாயக்கரின் சொத்துக்களா என்றால், பூர்வீக சொத்துக்கள் ஆகும். தாவா B அயிட்டத்தில் 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் தம்மாநாயக்கர், பெருமாள் நாயக்கர், பழனிச்சாமி நாயக்கர் மூவரும் 1992 ல் கிரையம் பெற்ற சொத்துக்களா என்றால் ஆமாம். ரெங்கம்ம நாயக்கர் எப்போது இறந்தார் என்றால்

அதுபற்றி தெரியாது. 04.06.1967 ல் இறந்ததால் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளனர் என்றால் அதுபற்றி தெரியாது. நான் B.A படித்துள்ளேன். TNPL நிறுவனத்தில் சூப்பர்வைசராக வேலை செய்கிறேன்.

3)ரெங்கம்மநாயக்கர் இறந்த போது தம்மாநாயக்கருக்கு என்ன வயது என்றால் அதுபற்றி தெரியவில்லை. எனது தந்தை படிக்கவில்லை. அவருக்கு வெளி உலக அனுபவம் கிடையாது. பெருமாள்நாயக்கர் 2, 3ம் வகுப்பு படித்திருக்கலாம். ரெங்கம்மநாயக்கர் மகன்கள் அனைவருக்கும் வெளி உலக அனுபவம் கிடையாது. ரெங்கம்மநாயக்கர் இறந்த பின்னிட்டு அவரது சொத்துக்களை மூத்தமகன் என்ற அடிப்படையில் தம்மநாயக்கர் பராமரித்தாரா என்றால் இல்லை. பெருமாள் நாயக்கர் பார்த்துக் கொண்டார். அவருக்கு பின்னிட்டு பெருமாள் நாயக்கரின் மைத்துனர் பொம்மாநாயக்கர் பார்த்துக் கொண்டார். அவரும் தற்போது இறந்து விட்டார். ரெங்கம்மநாயக்கர் இறந்த பின்னிட்டு குடும்பத்திற்காக சொத்துககள் வாங்கப்பட்டதா என்றால் இல்லை, அவரவர் சொத்துக்களை அவரவர் அனுபவித்து வந்தார்கள்.

4) எப்போது அவரவர்கள் அனுபவித்தார்கள் என்றால், எனக்கு சிறுவயதாக இருக்கும் போது தனியாக பிரித்து அனுபவித்து வருகிறார்கள். தேதி, மாதம், வருடம் தெரியாது. அவ்வாறு பிரித்துக் கொண்டதற்கு ஆவணம் ஏதாவது உண்டா என்றால் இல்லை. யார் பிரித்துக் கொடுத்தது என்றால் ஊர் பெரியவர்கள் பிரித்துக் கொடுத்தார்கள், அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. எவ்வாறு பிரித்தார்கள் என்றால், கயிறு போட்டு அளந்து பிரித்தார்கள். அவ்வாறு பிரித்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. கயிறு போட்டு பிரித்ததாக யார் என்னிடம் சொன்னது என்றால், எனது தாயார் சொன்னார். யார், யாருக்கு என்ன அளவில், எந்த பகுதியில் நிலம் பிரிக்கப்பட்டது என்ற விபரம் எனது தாயாருக்குத்தான் தெரியும் என்றால் சரிதான்.

5) எனது தாயார் இருக்கிறாரா என்றால் இருக்கிறார், அவருக்கு வயதாகிவிட்டது. சர்வே எண் 1555/1ல் எவ்வளவு நிலம் உள்ளது என்றால்,

சுமார் 4 ஏக்கர் இருக்கும். மேற்படி நிலத்தில் விவசாயம் செய்யப்படாமல் முள்காடாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் இருந்த முட்களை வெட்டி ரெங்கம்மநாயக்கரின் ஆண் வாரிசுகள் நான்கு குடும்பமும் பிரித்துக் கொண்டோமா என்றால் ஆமாம். சர்வே எண் 1571/1 என்பது காமக்காள் என்பவர் பெயரிலும், சர்வே எண் 1571/4 என்பது தாதாநாயக்கர் பெயரிலும் உள்ளதா என்றால், அது வேறு நபர்களின் நிலம் ஆகும். காமக்காள் என்பவரிடம் இருந்து எனது சித்தப்பா பெருமாள் மேற்படி நிலத்தை வாங்கியுள்ளரா என்றால் ஆமாம். பெருமாள் மேற்படி இடத்தை குடும்பகர்த்தா என்ற முறையில் வாங்கியுள்ளரா என்றால் இல்லை.

6) சர்வே எண் 1571/4 நிலத்தை ரெங்கம்மநாயக்கருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 1194/5, 1194/11 நிலங்களுக்கு பரிவர்த்தனையாக தாதாநாயக்கருடன், ரெங்கம்மநாயக்கர் வாரிசுகள் பரிவர்த்தனை செய்து கெண்டனரா என்றால் இல்லை. மேற்படி பரிவர்த்தனை வாய்மொழியாக நடைபெற்றது என்றும், மேற்படி நிலத்தை வாதி பழனிச்சாமியும், ரெங்கம்மநாயக்கரின் வாரிசுகளும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**